# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 174/பேரூ/2023**
**நாள் : 23.10.2024**

திருமதி. R. மாலதி,
கண்ணம்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
கண்ணம்பாளையம் பேரூராட்சி, கோயம்புத்தூர் மாவட்டம். – எதிர்மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர், கண்ணம்பாளையம் அஞ்சல், படைகல கவுண்டர் வீதி, க. எண். 2/12, என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. R. மாலதி என்பவரின் நாளிடப்படாத மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.06.2023 அன்று பெறப்பட்டு, 174/பேரூ/2023 என்ற எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர், கண்ணம்பாளையம் அஞ்சல், படைகல கவுண்டர் வீதி, க. எண். 2/12, என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. R. மாலதி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார் :-

"கோயம்புத்தூர் மாவட்டம், கண்ணம்பாளையம் பேரூராட்சி, சூலூர் வட்டம், க.ச.எண்.156 பி, 159 பி மற்றும் 159/7 நெ. காலைகளில் பு.ஏ. 4.38 ஏக்கர் நிலபரப்பில் **'வேலன் விலாஸ்'** என்ற பெயரில் மனைப்பிரிவு நி.மு.எண். 388/7 நாள் 13.08.2018 அன்று மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனை வரைபடத்தில் கண்ணம்பாளையம் பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பரிசு பத்திரம் (Gift Deed) ஆவண எண். 4688/2018–ன்படி பொதுமக்களின் பொது பயன்பாட்டிற்கு (19247 ச.அடி) 41 செண்ட் பூங்கா இடமாக மனைப்பிரிவு அமைப்பாளர்களால் ஒதுக்கப்பட்டது.

மேற்படி பொதுமக்களின் வசதிக்காக பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட பூங்கா இடத்தினை தனியார் கிரிக்கெட் வலைதள பயிற்சி முகாமிற்கு எவ்வித அனுமதி இல்லாமல் முன்னாள் செயல் அலுவலர் 30–க்கும் மேற்பட்ட விளக்குகள் பொருத்தி உயர்தர செயற்கை புல்தரை அமைத்து அதற்கு தேவையான தளவாடங்களுக்கு நீர் பாய்ச்சுவதற்கு போர்வெல் மற்றும் மின் இணைப்பும் பொது நிதியிலிருந்து கொடுத்து பேரூராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தியுள்ளதாக பொதுமக்கள் தொடர் புகார் மற்றும் "தினமலர் நாளிதழ்" 23.04.2022–ஆம் தேதியன்று செய்தி வெளியாகி சர்ச்சை எழுந்தது.

24.04.2022 அன்று தற்போதைய செயல் அலுவலர் மேற்படி புகார் தொடர்பாக சம்பந்தப்பட்ட "வேலன் விலாஸ்" மனைப்பிரிவு பூங்கா இடத்தினை ஆய்வு செய்து புகாரின் உண்மை நிலை அறிந்து மின் இணைப்பு எண். 052–004–939 துண்டித்து மேற்படி இடம் பேரூராட்சிக்கு சொந்தமானது என பெயர் பலகை வைக்கப்பட்டது.

இந்நிலையில்

1. பேரூராட்சி பொது அதிகார அமைப்பு,

2. "மில்லேனியம்" கிரிக்கெட் வலைதள பயிற்சி தனியார் மையம் எண்.(1)–ல் குறிப்பிட்ட பேரூராட்சி பொது அதிகார அமைப்பு எண். (2)–ல் குறிப்பிட்ட மில்லேனியம் தனியார் கிரிக்கெட் வலைதள பயிற்சி மையத்திற்கு ஆதரவாக பயன் பெறும் நோக்கில் 10.05.2002–ஆம் தேதியன்று நீதிமன்ற தீர்ப்புகளுக்கு எதிராக பொது நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட பூங்கா இடத்தினை, பயன்பாட்டு மாற்றம் செய்யும் நோக்கில் தீர்மான எண்.37/2022–ன்படி தீர்மானம் நிறைவேற்றி மாவட்ட நிர்வாக ஒப்புதல் இல்லாமல், மின்வாரிய சட்ட நெறிமுறைகளுக்கு எதிராக சம்பந்தப்பட்ட துறையின் N.O.C இல்லாமல் பரிந்துரை கடிதம் மூலம் 09.08.2022 அன்று மீண்டும் மின் இணைப்பு வழங்கப்பட்டு வணிக நோக்கில் செயல்பட்டு வருகிறது.

பேரூராட்சிக்கு சொந்தமான பூங்கா இடம் என்னும் பெயர் பலகையை அகற்றிவிட்டு மீண்டும் வணிக நோக்கில் செயல்படுவதை அறிந்து 03.10.2022 அன்று (1) பேரூராட்சி உதவி இயக்குநர் மற்றும் (2) பேரூராட்சி செயல் அலுவலருக்கு புகார் மனு அனுப்பினேன்.

இந்நிலையில் 03.10.2022–ல் அனுப்பப்பட்ட புகார் மனுவிற்கு நடவடிக்கை ஏதும் எடுக்காமல் ஆறு மாதம் கழித்து 04.05.2023–ம் தேதியன்று அளித்த பதில் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் இல்லாததால் இம்முறை மன்ற நடுவர் மன்றத்தில் வழக்காகி உள்ளது.

<u>இம்மனு மீது கோரும் பரிகாரம்</u>

கண்ணம்பாளையம் பேரூராட்சியில் கீழ்க்கண்ட மனைப்பிரிவு பூங்கா சம்பந்தமாக மாண்புமிகு உயர்நீதிமன்ற தீர்ப்புகள்.........

1. கண்ணம்பாளையம் பேரூராட்சி, மகாலட்சுமி நகர் மனைப்பிரிவு ........ மனைப்பிரிவு உரிமையாளர் அல்லது மனைப்பிரிவு புரமோட்டர்களால் அதில் குறிப்பிட்டுள்ளதை தவிர வேறு எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்த முடியாது. 01.11.2019 நாளிட்ட மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் W.P.No.5994, 7315, 7316 of 2013 and W.P.Nos.2 and 2 of 2013-ல் தீர்ப்புரை வழங்கப்பட்டது.

   ஜ.ஜான் தங்கராஜ் மற்றும் இருவர் (எதிர்) செயல் அலுவலர், கண்ணம்பாளையம் பேரூராட்சி.

2. பொது நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தை வழங்க மனுதாரர் சங்கத்திற்கு சட்டபூர்வ உரிமையில்லை. அது மட்டுமில்லாமல் பொது தேவைக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தில் எந்த கட்டுமானமும் அமைக்க மனுதாரர் சங்கத்திற்கு எந்த உரிமையும் இல்லை. 06.06.2022 நாளிட்ட மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் வழக்கு எண். W.P.No.9312 of 2009 and M.P. Nos. 1 of 2009 and 1 of 2010 ல் தீர்ப்புரை வழங்கப்பட்டது.

E. முத்துசீனி (எதிர்) செயல் அலுவலர், கண்ணம்பாளையம் பேரூராட்சி.

மேற்படி சர்ச்சைக்குரிய வேலன் விலாஸ்............

3. மனைப்பிரிவு அமைப்பாளர் திரு. ரமேஷ் 3வது வார்டு கவுன்சிலர் அவர்களின் கணவர் ஆவார் என்பதை தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

4. மாநில அளவில் குழந்தைகள் தேர்வாகி உள்ளனர் என்பது வணிக நோக்கில் செயல்படும் தனியார் அமைப்புக்கு ஆதரவாக செயல்படும் ஒரு நூதன ஏற்பாடாகும்.

5. கண்ணம்பாளயம் பேரூராட்சியில் பல மனைப்பிரிவுகள் பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடம் குடியிருப்போர் நலச் சங்கம் என்ற பெயரில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக V.G.P நகர் மனைப்பிரிவில் பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் வீடு கட்டப்பட்டுள்ளது. மற்றும் சவுராஷ்டிரா நகர் பகுதியில் பூங்கா இடத்தில் கிராவல் மண் அள்ளப்பட்டு தினசரி நாளிதழ்கள் மூலம் வெளிவந்து சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

6. மனைப்பிரிவுகளில் "பூங்கா" என்பது மனைப்பிரிவு வாசிகளால் இயற்கை சூழலோடு துய்ப்பதற்கான இடமாகும். உரிய மரங்களை நட்டு, இப்பரந்த பூமி பந்தில் மனிதனுக்கு மட்டுமில்லாமல் பிற உயிரினங்களும் வாழ்வதற்கு உயிரியல் நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்ட ஏற்பாடாகும். ஏனெனில் அனைத்து நகர் பகுதியிலும் கான்கிரிட் காடாக காட்சி அளிக்கிறது.

7. மேற்கண்ட காரணங்களால், கண்ணம்பாளையம் பேரூராட்சியில் பொதுமக்கள் பயன்படுத்தக் கூடிய பொது இடங்கள் எதிர்வரும் காலங்களில் இல்லாமல் போவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளது என்ற அடிப்படையில் பொது நோக்கத்திற்காக இம்மன்றத்தை நாடியுள்ளேன்.

எனவே, மாண்மிகு சமூகம் தக்கதென கருதும் இணை பிற நடவடிக்கைகள் உரிய உத்தரவுகள் பிறப்பிக்குமாறு இப்புகார் மனுவினை தங்கள் முன் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 16.06.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் கண்ணம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) கண்ணம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. அ. சதீஷ்குமார் என்பவர் தனது 12.08.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

"கோவை மாவட்டம், கண்ணம்பாளையம் பேரூராட்சியில் உள்ள வேலன் விலாஸ் குடியிருப்போர் நலச்சங்கத்தினர், மனைப்பிரிவில் குடியிருப்பவர்களுக்கு பூங்காவிற்காக ஒப்படைக்கப்பட்ட இடத்தில், கிரிக்கெட் வலைப்பயிற்சி மேற்கொள்ள அனுமதி கோரி கடிதம் வரப்பெற்றது.

இதனைத் தொடர்ந்து, கண்ணம்பாளையம் பேரூராட்சி மன்றத் தீர்மானத்தில், (தீர்மானம் எண். 37/2022, நாள் 10.05.2022) கிரிக்கெட் வலைப்பயிற்சி மேற்கொள்ளும் குழந்தைகள் மாநில அளவில் தேர்வாகி உள்ளதாலும், பயிற்சிக்காக ஆகும் மின் கட்டணம் மற்றும் தண்ணீருக்கான கட்டணங்களை தங்களது சொந்த செலவில் செலுத்துவதாக தெரிவிக்கப்பட்டதால், தொடர்ந்து பயிற்சி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம் என கண்ணம்பாளையம் பேரூராட்சி மன்றத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி இடத்தினை நேரில் ஆய்வு செய்யப்பட்டதில், கண்ணம்பாளையம் பேரூராட்சி க.ச.எண்.156பி, 159 பி மற்றும் 159/7–ல் நெ.காலையில் 4.38 ஏக்கர் நிலப்பரப்பில் வேலன் விலாஸ் என்ற குடியிருப்புப் பகுதி அமைந்துள்ளது. இதில் கோயம்புத்தூர் உள்ளூர் திட்ட குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் 90 மனையிடங்களாக பிரிக்கப்பட்டு அதில் 19247 சதுரடி பூங்காவிற்காக மனைப்பிரிவு உரிமையாளரால் பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், இம்மனைப்பிரிவில் குடியிருப்பவர்கள் சுமார் 500 மீட்டர் தொலைவிலுள்ள குமரன் பார்க் என்ற மனைப்பிரிவில் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடத்தினை பயன்படுத்தி வருகின்றனர். மேலும் இம்மனைப்பிரிவில் 90 மனையிடங்களில் தற்போது 22 குடியிருப்புகள் மட்டுமே உள்ளது. மேற்படி சிறுவர்கள் விளையாட்டு மைதானங்கள் இம்மனைப்பிரிவிலிருந்து சுமார் 18 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது என தெரிய வந்தது. மேலும் கிரிக்கெட் வலைப்பயிற்சி மேற்கொள்ள நிரந்தர கட்டமைப்பு ஏதும் ஏற்படுத்தப்படவில்லை எனவும், மனைப்பிரிவு குடியிருப்போர் நலச்சங்கத்தினரிடம் பயிற்சி பெறும் சிறுவர்களிடம், வணிக நோக்கில் தொகை ஏதும் வசூலிக்கக்கூடாது எனவும் அறிவுறுத்தப்பட்டது. இந்நிலையில் வரும் காலங்களில் அனைத்து மனைகளிலும் குடியிருப்பு ஏற்பட்ட பின்னர் பூங்காவாக பராமரிக்க பேரூராட்சியால் எடுக்கப்படும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு நல்குவதாக மனைப்பிரிவு குடியிருப்போர் நல சங்கத்தினரால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் வேலன் விலாஸ் மனைப்பிரிவில் தற்காலிக கிரிக்கெட் வலைப்பயிற்சி பெறும் உபகரணங்கள் வைக்க ஒரு அறை மற்றும் கழிப்பிடம் மட்டுமே ஓட்டு வில்லைகளால் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 19247 சதுரடி பரப்புள்ள பூங்கா இடத்தில் மூன்று புறம் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி கிரிக்கெட் வலைப்பயிற்சி மேற்கொள்ள உபகரணங்கள் மற்றும் பராமரிப்புக்கு மனைப்பிரிவில் குடியிருப்பவர்களிடமிருந்து தொகை வசூலிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்கள். மேலும் பயிற்சிக்கு கட்டணங்கள் ஏதும் வசூலிக்கப்படுவதில்லை என மனையில் குடியிருப்பவர்களல் தெரிவிக்கப்பட்டது.

இதுதவிர பயிற்சி பெறும் குழந்தைகளிடமிருந்து தொகை ஏதும் வசூலிக்கப்படுவதில்லை என இம்மனைப்பிரிவில் குடியிருப்பவர்களால் தெரிவிக்கப்பட்டது. மேலும் பூங்கா இடத்திற்கு நிரந்தர கட்டமைப்பு ஏதும் ஏற்படுத்தப்படவில்லை என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரும் மற்றும் கண்ணம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரும் 10.09.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 28.08.2024 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திருமதி. R. மாலதி 10.09.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :-

"கோயம்புத்தூர் மாவட்டம், கண்ணம்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட புல எண்.156 பி,159 பி மற்றும் 159/7ல் 4.38 ஏக்கர் பரப்பளவில் 'வேலன் விலாஸ் ' என்ற பெயரில் அங்கீரிக்கப்பட்ட மனைப் பிரிவில் மனைப்பிரிவின் புரோமோட்டர் திரு. ரமேஷ்குமார் (தற்போது நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட்டு மூன்றாவது வார்டு கவுன்சிலராக உள்ள

திருமதி அருளானந்தியின் கணவர்) என்பவரால், கண்ணம்பாளையம் பேரூராட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட (Gift Deed) 19,247 சதுர அடி பரப்பளவு இடத்தினை பொதுமக்களின் பொது பயன்பாட்டிற்கு பூங்கா இடமாக மனை ஒதுக்கீடு செய்யப்பட்ட சுமார் ரூ. 6 கோடி மதிப்புள்ள இடத்தினை பேரூராட்சி செயல் அலுவலர் எவ்வித முன் அனுமதியின்றி மில்லேனியம் கிரிக்கெட் வலைதளம் என்னும் தனியார் பயிற்சி முகாமாக அமைக்க அதற்கு தேவையான தளவாடங்கள், விளக்குகள், மின் இணைப்புகள் போன்றவற்றை பேரூராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதில் பேரூராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. [23.04.2022 அன்று தினமலர் செய்தி] நாளிதழ் செய்தியை தொடர்ந்து, மேற்படி புகாராக தெரிவிக்கும் இடத்தில் வழங்கப்பட்ட மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு, பேரூராட்சிக்கு சொந்தமான இடம் என பெயர்பலகை வைக்கப்பட்டது.

இந்நிலையில், பொது நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட பூங்கா இடத்தினை பயன்பாட்டு மாற்றம் செய்யும் நோக்கில், பேரூராட்சியின் தீர்மானம் எண்.37/2022ன்படி, தீர்மானம் நிறைவேற்றி மாவட்ட நிர்வாக ஒப்புதல் இல்லாமல், சம்பந்தப்பட்ட துறையின் NOC இல்லாமல் 13.09.2022 அன்று மீண்டும் மின் இணைப்பு வழங்கப்பட்டு வணிக நோக்கில் செயல்பட்டு வருகிறது. இவ்வாறு பொது நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தை அதில் குறிப்பிட்டுள்ளதை தவிர வேறு எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்த முடியாது என்று மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண்.W.P.No.5994, மற்றும் 7316 of 2013 and M.P.Nos.2 and 2 of 2013–ல் 01.11.2017 அன்று வழங்கப்பட்ட தீர்ப்புரைக்கு எதிரானது.

கிரிக்கெட் விளையாட்டில் மாநில அளவில் குழந்தைகள் தேர்வாகி உள்ளனர் என்பது வணிக நோக்கில் செயல்படும் தனியார் அமைப்புக்கு ஆதரவாக செயல்படும் ஒரு நூதன ஏற்பாடாகும்.

கண்ணம்பாளையம் பேரூராட்சியில் பல மனைப்பிரிவுகளில் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடத்தினை குடியிருப்போர் நலச்சங்கம் என்ற பெயரில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

மேற்படி இடத்தில் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்றி மீண்டும் பூங்காவாக பராமரிக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

6) எதிர்மனுதாரான கண்ணம்பாளையம் பேரூராட்சியின் செயல் அலுவலர் திரு. அ. சதீஷ்குமார் என்பவர் 10.09.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:-

" கண்ணாம்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 156பி, 159 பி மற்றும் 159/7ல் 4.38 ஏக்கர் நிலப்பரப்பில் வேலன் விலாஸ் என்று அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் 90 மனையிடங்களாக பிரிக்கப்பட்டு இதில் 30 குடியிருப்புகள் மட்டுமே உள்ளன. இதில் சுமார் 19247 சதுரடி பரப்பளவு இடம் பூங்கா அமைப்பதற்காக நில உரிமையாளரால் பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது. மேற்படி பூங்காவிற்கென ஒதுக்கப்பட்ட இடத்தினை, கிரிக்கெட் வலைதள பயிற்சி மையமாக மாற்றுவதற்கான தீர்மான எண்.37/2022, நாள் 10.05.2022–இன்படி தீர்மானம் நிறைவேற்றி கோயம்புத்தூர் மாவட்டஉள்ளூர் திட்ட குழும உதவி இயக்குநருக்கு 23.05.2023 அன்று அனுமதி வேண்டி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், மனையில் அப்பகுதி பொதுமக்கள் ஒன்று சேர்ந்து பேரூராட்சி பூங்கா இடத்தை தங்கள் செலவில் கம்பிவேலி அமைத்து இலவசமாக கிரிக்கெட் பயிற்சி மேற்கொண்டு வருவதை தொடர பேரூராட்சியின் அனுமதி வழங்கக் கோரப்பட்டது. இவ்வாறு பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற மனுவில் மேற்படி பயிற்சி மையத்தில் விளையாடி வரும் குழந்தைகள் மாநில அளவில் தேர்வாகி உள்ளதன் அடிப்படையிலும், வலைப் பயிற்சி

மேற்கொள்வதற்கு ஏற்படும் மின்கட்டணம், குடிநீர் கட்டணம் தம் சொந்த செலவில் செலுத்துவதாகவும் தெரிவித்ததைத் தொடர்ந்து பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம் (தீர்மான எண்.37/2022 நாள் 10.05.2022) நிறைவேற்றப்பட்டு, கிரிக்கெட் வலைப்பயிற்சிக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

மேற்காணும் வலைப்பயிற்சி மேற்கொள்ள நிரந்தர கட்டமைப்பு ஏற்படுத்தவில்லை. உபகரணங்கள் வைக்க ஒரு அறை மற்றும் கழிப்பிடம் மட்டும் ஓட்டு வில்லைகளால் அமைக்கப்பட்டது.

19247 சதுர அடி பரப்புள்ள பூங்கா இடத்தில் மூன்று புறம் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது. கிரிக்கெட் வலைப்பயிற்சிக்கான உபகரணங்கள் மற்றும் பராமரிப்பு செலவினங்களுக்கு குடியிருப்புதாரர் வேலன் விலாஸ் குடியிருப்போர் நல சங்கம் மூலமாக பயிற்சி கட்டணமாக ஒரு மாணவருக்கு மாதமொன்றுக்கு ரூ.1500 வீதம் தற்போது 12 மாணவர்களிடம் தொகை வசூலிக்கப்படுகிறது. வேலன் விலாஸ் அனைத்து மனைகளிலும் குடியிருப்பு ஏற்பட்ட பின்னர் பூங்காவாக பராமரிக்க பேரூராட்சியால் எடுக்கப்படும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு நல்குவதாக குடியிருப்போர் நலச்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். இருப்பினும், பேரூராட்சி மன்ற தீர்மானத்தின்படி, எதிர்காலத்தில் தற்போது செயல்பட்டுவரும், கிரிக்கெட் வலை பயிற்சி மையத்தை தொடர்ந்து நடத்திட உரிய அனுமதி பெற, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், கண்ணம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

கோயம்புத்தூர் மாவட்டம், கண்ணம்பாளையம் என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திருமதி. ஆர். மாலதி என்பவர் தனது முறையீட்டு மனுவில், கோயம்புத்தூர் மாவட்டம், கண்ணம்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட புல எண்.156/1B1A ல் அமைந்துள்ள வேலன் விலாஸ் என்ற மனைப்பிரிவில் மனைப்பிரிவு அமைப்பாளர்களால் பொதுமக்களின் பொது பயன்பாட்டிற்கு பூங்காவினை அமைக்க 19247 ச.அடி பேரூராட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட மனைப்பிரிவில் எவ்வித அனுமதியின்றி வலைப் பயிற்சி அமைத்து வணிக நோக்கத்தில் செயல்பட்டு வருவதாக புகாராக தெரிவித்து அந்த ஆக்கிரமிப்பை அகற்றிட ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

கோயம்புத்தூர் மாவட்டம், கண்ணம்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட கண்ணம்பாளையம் கிராமத்தில் புல எண்.156/ 1பி, 159/ 5பி மற்றும் 159/7 ல் 'வேலன் விலாஸ்' என்கிற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது

மேற்காணும் குடியிருப்பு மனைப் பிரிவில் 4.38 ஏக்கர் நிலப்பரப்பில் 90 மனையிடங்கள் அமைக்கும் வகையில் மனைப்பிரிவு அமைப்பாளர்களால் இம்மனைப்பிரிவில் (i) சாலைகள் (ii) பூங்கா மற்றும் (iii) பொது உபயோகத்திற்காக இடங்கள் கண்ணம்பாளையம் பேரூராட்சிக்கு தானமாக 26.04.2018 அன்று தானப்பத்திரம் மூலம் வழங்கப்பட்டுள்ளது. தானமாக வழங்கப்பட்ட இடத்தில் 19247.81 சதுரடி பரப்பளவில் உள்ள இடமானது பூங்கா அமைப்பதற்கும் தானப்பத்திரத்தில் இடம் பெற்றுள்ளது.

பொது பயன்பாட்டிற்காக பூங்கா அமைக்க ஒதுக்கப்பட்ட 19247 சதுரடி இடத்தில், மில்லேனியம் கிரிக்கெட் வலைதள பயிற்சியானது, தனியார் நிறுவனத்தின் மூலம் நடத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து வரப்பெற்ற புகாரின் அடிப்படையில், பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடமானது கண்ணம்பாளையம் பேரூராட்சிக்கு சொந்தமானது என அறிவிப்பு பலகை வைக்கப்பட்டது.

இதற்கிடையில் மேற்படி கிரிக்கெட் வலைதள பயிற்சி இலவசமாக மேற்கொண்டும், தங்களது சொந்த செலவில் பூங்கா இடத்தை சுத்தம் செய்து கம்பிவேலி அமைத்து பயிற்சி அளிப்பதை தொடர்ந்து நடத்திட அனுமதிக் கோரி அப்பகுதி பொதுமக்களிடமிருந்து 28.04.2022 நாளிட்ட மனுக்கள் பேரூராட்சிக்கு வரப்பெற்றதைத் தொடர்ந்து, மேற்படி பயிற்சி மையத்தில் விளையாடி வரும் குழந்தைகள் மாநில அளவில் தேர்வாகி உள்ளதாலும், கூடுதல் குழந்தைகள் பயிற்சி மேற்கொள்ளவும், மேற்படி பயிற்சிக்காக ஆகும் மின்கட்டணம் மற்றும் குடிநீர் கட்டணம் பேரூராட்சிக்கு எவ்வித நிதியிழப்பின்றி, தங்கள் சொந்தச் செலவில் மேற்கொள்வதாக அப்பகுதி மக்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து, மேற்படி கிரிக்கெட் வலைதள பயிற்சியை தொடர்ந்திட கண்ணம்பாளையம் பேரூராட்சியில் 10.05.2022 அன்று தீர்மானம் (தீர்மான எண. 37/2002) நிறைவேற்றப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானத்திற்கு அனுமதி கோரி கோயம்புத்தூர் மாவட்ட உள்ளூர் திட்ட குழும உதவி இயக்குநருக்கு 23.05.2023 அன்று கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது என்கிற விவரம் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்கு மூலம் வாயிலாக தெரியவருகிறது. மேலும் தற்போது செயல்பட்டு வரும் கிரிக்கெட் பயிற்சி மையத்தை எதிர்காலத்தில் தொடர்ந்து நடத்திட உரிய அனுமதி பெறவும் நடவடிக்கை மேற்கொள்ளபட்டு வருவதாகவும் செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்த வெளிகள் (பாதுகாப்பு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், பிரிவு 6ன் படி, இச்சட்டப் பிரிவு 4 அல்லது 5–ன் கீழ் வெளியிடப்பட்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பூங்கா, விளையாட்டு மைதானம் அல்லது திறந்தவெளி ஆகியவை அரசின் முன் அனுமதியின்றி, அந்த தேதியில் பயன்படுத்தப்பட்ட நோக்கம் அல்லது நோக்கங்களைத் தவிர வேறு எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தக்கூடாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

**Tamil Nadu Parks, Play-Fields And Open Spaces (Preservation And Regulation) Act, 1959 (Tamil Nadu Act 26 of 1959)**

xxxxxxxxxxx xxxxxxxxxxx xxxxxxxx xxxxx xxxxxxx xxxx xxxxxxxxxx

**Sec. 6. Prohibition Of The Use Of Parks, Play-Fields And Open Spaces In Certain Cases :-**

No park, play-field or open space specified in the list published under section 4 or 5 shall, except with the previous sanction of the Government, be used for any purpose other than the purpose or purposes for which it was used on the date of the coming into force of this Act under subsection (3) of section 1 or on the date with effect from which this Act is extended to the local area concerned under sub-section (4) of section 1, as the case may be.

இந்நேர்வில், வேலன் விலாஸ் குடியிருப்பு மனைப்பிரிவு அமைப்பாளரால் பொது பயன்பாட்டிற்கு பயன்படும் வகையில் பூங்கா அமைத்து பராமரிக்க 19,247 சதுரடி பரப்பளவு கொண்ட நிலத்தில் பொதுமக்கள் மற்றும் அக்குடியிருப்புதாரர்களின் வேண்டுகோளின்படி, பூங்கா அமைப்பதற்கான இடத்தில் கிரிக்கெட் வலைதளப் பயிற்சி தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ள கண்ணம்பாளையம் பேரூராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமத்தின் அனுமதிக் கோரி செயல் அலுவலரின் கருத்துரு திட்டக்குழுமத்திற்கு அனுப்பியுள்ளார். ஆனால் இதற்கான அரசின் அனுமதி ஏதும் பெறப்படவில்லை என தெரியவருகிறது. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்த வெளிகள் (பாதுகாப்பு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், பிரிவு 6ல், பூங்கா, விளையாட்டு மைதானம் மற்றும் திறந்தவெளிக்காக ஒதுக்கப்பட்ட இடத்தை

எந்த நோக்கத்திற்காக குறிப்பிடப்பட்டுள்ளதோ, அதே நோக்கத்திற்கு மட்டும் பயன்படுத்த வேண்டும் எனவும், பயன்பாட்டின் நோக்கம் மாற்றப்படுவதெனில், அரசின் அனுமதி பெற்றிருக்க வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது. எனவே, பூங்கா அமைப்பதற்காக தானமாக வழங்கப்பட்ட இடத்தில் கிரிக்கெட் வலைதள பயிற்சிக்காக பயன்படுத்த வேலன் விலாஸ் குடியிருப்புவாசிகள் விரும்பினால், உரிய சட்ட விதிகளின்படி அரசின் அனுமதி பெறப்பட வேண்டும் என கண்ணம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு, அக்டோபர், 23 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திருமதி. R. மாலதி,
   2/12, படைகல கவுண்டர் வீதி,
   கண்ணம்பாளையம் அஞ்சல், சூலூர்,
   கோயம்புத்தூர் மாவட்டம் – 641 402
2. செயல் அலுவலர்,
   கண்ணம்பாளையம் பேரூராட்சி,
   கோயம்புத்தூர்மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம். ஆர்.சி நகர், சென்னை – 28
4. இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer )
   (பெயர்யிடப்பட்ட உரையில்)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை – 28.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

24/10/24

சட்ட ஆலோசகர் / செயலாளர் (முகூபொ)

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032